# Thirukkural and Artificial Intelligence: The Thirukural.AI Website

**G. Surya**
*Research Scholer, Tamil Department*
*SRM University, Kattankulathur*

**Dr. B. JaiGanesh**
*Associate Professor, Department of Tamil*
*SRM University, Kattankulathur*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜனவரி**

**வருடம்: 2026**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18981560

**Abstract**

*Tamil literature has consistently evolved over centuries, adapting itself to changing times by embracing new forms and contents. From ancient palm leaf manuscripts to modern print editions, translations, and critical researches, the Tamil language has reached a sophisticated stage of growth. Among its classical treasures, the Thirukkural holds a pre-eminent position. Since its first print publication in 1812 by Tanjai Gnanaprakasar, the Thirukkural has undergone a monumental journey. This era also marked the beginning of its global outreach through translations by scholars like F.W. Ellis. In the 20th century, the Thirukkural expanded its reach through academic curricula, seminars, and conferences. Transitioning into the 21st century, its dissemination shifted towards the digital landscape, encompassing websites, blogs, e-books, and social media platforms. It further evolved into inclusive formats such as Braille, sign language videos, and podcasts. Today, the Thirukkural has integrated with the cutting-edge technology of Artificial Intelligence (AI). This paper explores the development of the dedicated platform "Thirukural. AI", analyzes its current implementation methods, and suggests essential enhancements to optimize the application of Thirukkural in the AI era.*

***Keywords:*** *Tamil Literature, Thirukkural, Digital Humanities, Artificial Intelligence, Thirukural.AI, Translation, Literary Evolution*

**References**

1. Department of Information Technology and Digital Services (ITDS). Government of Tamil Nadu. [it.tn.gov.in].
2. Duraiarasan, K.InaiyamumIniya Thamilum (The Sweetness of Tamil on the Internet).
3. Kani Tamil24 Conference. (2024). Virtual presentation on the advancements of Tamil Computing. [https://youtu.be/EGXQWAhP5S0].
4. Namakkal Kavignar (Comm.). Thirukkural. Saradha Pathippagam, Chennai.
5. Niroash (Researcher). (2015). Uthadugal Ottatha Thirukkuralgal: Idhazhagal Kural Venbaakkal (Thirukkural without Labials). [https://niroash.blogspot.com/2015/04/thirukkural-inspiration.html].
6. Prakash, K. Inaiyamum Thamilum (Internet and Tamil). [Research Article].
7. Tamil AI. Artificial Intelligence Application and YouTube Channel.
8. Thirukkural AI. Artificial Intelligence Application (Thirukural.AI).
9. Thirukkural Chatbot. Artificial Intelligence Application.

# திருக்குறளும் செயற்கை நுண்ணறிவும் (திருக்குறள்.AI இணையதளம்)

***கோ. சூர்யா***
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, எஸ்.ஆர்.அறிவியல் மற்றும் கலையியல் புலம்
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்
காட்டாங்குளத்தூர், செங்கல்பட்டு மாவட்டம்

***முனைவர் பா. ஜெய்கணேஷ்***
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
அறிவியல் மற்றும் கலையியல் புலம்
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்
காட்டாங்குளத்தூர், 603203, செங்கல்பட்டு மாவட்டம்

*தமிழ் இலக்கியம் காலந்தோறும் தன்னைத் தகவமைத்துக்கொண்டு, புதிய வடிவங்களையும் உள்ளடக்கங்களையும் உள்வாங்கி நாளுக்கு நாள் புதிய பரிணாம வடிவங்களைக் கொண்டு வளர்ந்து வருகிறது. ஓலைச்சுவடி, பதிப்பு, மொழிபெயர்ப்பு, ஆய்வு, திறனாய்வு எனப் பல படிநிலைகளில் தமிழ் மொழியும் தமிழ் இலக்கியங்களும் இன்று வளர்ந்து நம்முன் நிற்கின்றன. தமிழ் மொழியின் தொன்மை நூல்களுள் ஒன்றான திருக்குறளின் வாசிப்பானது தமிழ் இலக்கியங்களில் மிகவும் முக்கியமானதாக உள்ளது. ஓலைச்சுவடிகளில் இருந்த திருக்குறள் **19**ஆம் நூற்றாண்டு தொடங்கி இன்று வரை பல்வேறு பதிப்புகளைக் கொண்டிருக்கிறது. தமிழ் இலக்கியத்தின் போக்கு என்று பேசும்போதெல்லாம் **19**ஆம் நூற்றாண்டின் தமிழ் நிலையை ஆராய வேண்டியது ஆய்வாளர்களின் கடமையாக உள்ளது. ஏனெனில் அக்கால கட்டத்திலேயே திருக்குறளானது பதிப்புகள், உரைகள், மொழிபெயர்ப்புகள் எனப் பல நிலைகளில் தமிழர்களிடையே மட்டுமன்றிப் பிற நாட்டு அறிஞர்களிடமும் அறிமுகமாகிக் கொண்டிருந்தது.*

***1812**இல் தஞ்சைநகரம் மலையப்பப்பிள்ளை குமாரன் ஞானப்பிரகாசரால் முதல் பதிப்பு வெளிவந்தது. இதே காலகட்டத்தில் எல்லீஸ்துரை அவர்கள் திருக்குறளின் பகுதிகளை மொழிபெயர்க்கிறார். இப்படியாகத் தொடங்கிய திருக்குறளின் பயணம் **20**ஆம் நூற்றாண்டில் பல்வேறு நிலைகளில் பரவலாகக் கொண்டு செல்லப்பட்டது. **19** ஆம் நூற்றாண்டுத் தொடங்கி புதிய கல்விமுறைக்கு ஏற்ப கல்வி நிலையங்களில் பாடத் திட்டங்களாகவும் வைக்கப்பட்டது. கருத்தரங்கங்கள், மன்றங்கள், மாநாடுகள் எனப் பல திசைகளிலும் திருக்குறளின் எல்லை விரிவடைந்தது. அதைத் தொடர்ந்து **21**ஆம் நூற்றாண்டில் திருக்குறள் பரவலாக்கம் கணினி வழி நிகழத் தொடங்கியது.*

*இணையம் மூலம் இணையதளங்கள், வலைப்பூக்கள், மின்நூல் வடிவம், இணைய இதழ்கள், சமூக வலைதளங்கள் வழி விரிவாக்கம் பெற்றது. பிரெயில் வடிவில், வலையொளி வழி சைகை மொழி வடிவில் எனத் திருக்குறள் கொண்டு செல்லப்பட்டன.*

***21**ஆம் நூற்றாண்டில் புதிதாகத் தோற்றம் பெற்ற செயற்கைநுண்ணறிவுக்குள்ளாகவும் திருக்குறள் தற்போது இடம்பெறத் தொடங்கியுள்ளது.*

இதன் தொடர்ச்சியில் திருக்குறள் AI (Thirukural.AI) என்னும் தனி இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இணையதள உருவாக்க முயற்சியினையும் அதில் திருக்குறளின் பயன்பாட்டு முறைகளையும் மேம்படுத்த வேண்டிய செயல்பாடுகளையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## இணையம்

இணையம் இன்று உலகம் முழுவதும் பல கோடி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய கண்டுபிடிப்பாக உள்ளது. நாம் நம் கருத்துக்களை நாடுகள் கடந்தும் கண்டங்கள் கடந்தும் தெரிவிக்கவும் பிறர் கருத்துக்களை அறிந்து கொள்ளவும் இணையம் பயன்பட்டு வருகின்றது. அதைக் காட்டிலும் இலக்கியம், இலக்கணம், கணிதம், அறிவியல், சித்தம், யோகம், ஓவியம், விளையாட்டு எனப் பல்வேறு துறைகளிலும் இணையம் முக்கியப் பங்காற்றி வருகிறது.

உலகெங்கும் சிதறிக் கிடக்கும் தகவல்களை இணையத்தில் இணைத்து விட்டால் யாரும் எந்த நேரமும் சென்று தகவல்களைப் பெற முடியும். ஒரு காலத்தில் ஒன்றைப் பற்றி அல்லது ஒருவரைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் நூலகங்களுக்குச் செல்ல வேண்டிய சூழல் இருந்தது. இப்பொழுது தேவையான ஒன்றைப் பற்றி அறிந்து கொள்ள நாம் அன்றாடம் பயன்படுத்தி வரும் கையடக்கக் கருவியான அலைபேசியே போதும். இதை இன்னும் ஒரு படி மேலாகத் திருக்குறளைச் சான்றாக வைத்து, ஆய்வாளர் கா. பிரகாஷ் அவர்கள் இணையமும் தமிழும் என்னும் ஆய்வுக் கட்டுரையில்

> ***எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்***
> ***திண்ணியர் ஆகப் பெறின் (குறள் 666)***

என்ற குறளில் எண்ணியவர் எண்ணியபடியே செயல் ஆற்றுவதில் உறுதி உடையவராக இருக்கப்பெற்றால் அவர் எண்ணியவற்றை எண்ணியவாறு அடைவது. (மணக்குடவர் உரை; தாம் எண்ணிய பொருள்களை எண்ணினபடியே பெறுவர்.) என்று திருவள்ளுவர் குறிப்பிடுவது போல் நீங்கள் எதைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அதனை இணையத்தில் சென்று ஒரு சில நொடிகளில் தேடித் தெரிந்துக் கொள்ளலாம் (இணையமும் தமிழும்) என்று குறிப்பிடுகிறார். இவ்வாறாக இணையத்தில் கிடைக்கக்கூடிய செய்திகளைப் பற்றித் திருக்குறளின் மூலம் மேற்கோள் காட்டுகிறார் ஆய்வாளர்.

## செயற்கை நுண்ணறிவு (AI)

புத்திசாலித்தனமான இயந்திரங்களை உருவாக்கும் அறிவியல் மற்றும் பொறியியலை விவரிக்க **1956**ஆம் ஆண்டு செயற்கை நுண்ணறிவு AI (Artificial intelligence) என்ற சொல் உருவாக்கப்பட்டது. அதாவது வடிவங்களை அடையாளம் காணவும் தரவைப் பகுப்பாய்வு செய்யவும் சிக்கல்களைத் தீர்க்கவும் பணிகளை முடிக்கவும் கற்றுக் கொள்ளவும் கூடிய இயந்திரங்களை இந்நிரல்களில் அடையாளம் காணலாம்.

செயற்கை நுண்ணறிவானது கல்வி நிலையங்கள், கணிப்பொறி நிறுவனங்கள் போன்ற பல்வேறு நிலைகளில் அன்றாடம் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் உரை, படங்கள், காணொளிகள், குரலொலிகள், இசை, மற்றும் குறியீட்டை உருவாக்கும் திறன் கொண்டதாகச் செயற்கை நுண்ணறிவு வலம் வருகின்றது.

"'Eaton Business school'' என்ற கல்வி நிறுவனம் செயற்கை நுண்ணறிவினை ஏழு வகையாகத் தற்போது பிரித்துள்ளது. அவை

1. குறுகிய செயற்கை நுண்ணறிவு (Narrow AI)
2. பொது செயற்கை நுண்ணறிவு (General AI)
3. சிறப்பான செயற்கை நுண்ணறிவு (Super AI)
4. எதிர்வினை இயந்திர செயற்கை நுண்ணறிவு (Reactive machines AI)
5. வறையறுக்கப்பட்ட நினைவக செயற்கை நுண்ணறிவு (Limited memory AI)
6. மனதிற்கான கோட்பாட்டு செயற்கை நுண்ணறிவு (Theory of mind AI)
7. சுய விழிப்புணர்வு செயற்கை நுண்ணறிவு (Self& Aware AI)

இந்நிலையில் தமிழ்மொழி மற்றும் தமிழ் இலக்கியங்களிலும் செயற்கை நுண்ணறிவின் தாக்கம் பரவலாகக் காணப்படுகிறது. அதில் திருக்குறளும் தனித்த அடையாளம் பெறுகின்றது.

### திருக்குறள் AI (Thirukural.AI)

திருக்குறள் AI, கிஸ்ஃப்ளோவின் தலைமை நிர்வாக அதிகாரியும் டிரீம் தமிழ்நாடு (Dream of Tamil Nadu) ஒருங்கிணைப்பாளருமான சுரேஷ் சம்பந்தம் அவர்களின் தலைமை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் 2024 ஆண்டில், மிகுந்த ஆர்வமுள்ள தமிழ் தெரிந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் குழுவால் உருவாக்கப்பட்டது. திருக்குறளுக்கு ஏராளமான வலைத்தளங்கள் இருந்தாலும், Gen AI தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் Chat GPT போன்ற ஊடாடும் தன்மையில் இயக்கப்படுவதில்லை. திருக்குறளுக்கு Gen AII பயன்படுத்துவதற்கும், திருக்குறளைப் பற்றிய எதையும் எவரும் மென்பொருளை வினவுவதைச் சாத்தியமாக்குவதற்கான முயற்சியே ஆகும்.

திருக்குறள் AI செயற்கை நுண்ணறிவு திருக்குறள் சார்ந்த எவ்விதக் கேள்விகளைக் கேட்டாலும் பதில் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இது குறித்து திருக்குறள் AI, கிஸ்ஃப்ளோவின் தலைமை நிர்வாக அதிகாரியும் டிரீம் தமிழ்நாடு (Dream of Tamil Nadu) ஒருங்கிணைப்பாளருமான சுரேஷ் சம்பந்தம் அவர்கள் கணித்தமிழ்-24 மாநாட்டில் பல விளக்கங்களைத் தந்துள்ளார். அவை:

தமிழ் மொழி என்பது பழைய மொழியே தவிர பழமைவாத மொழி அல்ல. தமிழ் மொழி தன்னைத்தானேபுதுப்பித்துக்கொள்ளும்தன்மை கொண்டது. அதன் அடுத்தக்கட்ட வளர்ச்சியாக இன்று செயற்கை நுண்ணறிவு தமிழை வளர்க்க ஆரம்பித்துவிட்டது. திருக்குறளின் முதல் கட்ட செயற்கை நுண்ணறிவாக திருக்குறள்AI, உங்கள் முன் காட்டப்பட்டுள்ளது. இதைத் தமிழ் மொழியின் அடுத்தக்கட்ட வளர்ச்சியாகப் பார்க்கிறோம், வளர்ச்சிக்கான பாதையை நோக்கியே தமிழ் மொழி பயணித்துக் கொண்டுள்ளது என்று நம்புகின்றோம் (கணித்தமிழ்-24, (நேர்காணல்.) வலையொளி பக்கம்,08-02-2024) என்று கூறினார்.

### திருக்குறள்.AI யின் பணி

திருக்குறள்.AI திருக்குறளைப் பயனர்கள் பகுப்பாய்வு செய்யவும் புரிந்துகொள்ளவும் அதிலிருந்து தகவல்களைக் கண்டறியவும் உதவும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு செயற்கை நுண்ணறிவு (AI) ஆகும். திருக்குறளை மக்களிடத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பதே இதன் முக்கியப் பணியாகச் உள்ளது. திருக்குறள்.AI என இணையதளத்தில் தேடும் போது, திருக்குறள்.AI என்னும் வலைதளம் மூலம் நாம் உள்நுழையலாம், பின் செயற்கை நுண்ணறிவினால் திருக்குறள் சார்ந்த கேள்விகள், சந்தேகங்கள், அதிகாரங்கள், பால் வைப்புமுறைகள், குறள்கள் எனத் திருக்குறள் சார்ந்து எதைக் கேட்டாலும் அதற்கான தகவலைத் தரும்.

உதாரணமாக, ஆங்கிலத்திலோ தமிழிலோ நாம் குடும்பம் (Family) என்று திருக்குறள்.AI யிடம் உள்ளீடு செய்தால் இல்வாழ்க்கை, குடும்பம், தாய்க்கும் மகன் மகளுக்கான உறவு, கணவன் மனைவி இல்வாழ்க்கை என நமக்கு வள்ளுவர் அருளிய குறள்களைக் (குறள் எண்கள் - 44, 521, 522,524,601,604,992,958) காட்டுகின்றது. பின் அதற்கான நான்கு உரையாசிரியர்களின் (மு.வரதராசன், கலைஞர் மு.கருணாநிதி, பரிமேலழகர், சாலமன் பாப்பையா) உரைகளைத் தருகின்றது. இது மட்டுமல்லாமல் ஒரு படி மேலாகத் தாய்மை சார்ந்த குறள்கள் வேண்டும் எனக் கேட்டால் “தாய் குறித்த குறிப்புகள் திருக்குறளில் நேரடியாக இல்லை. ஆனால், பெற்றோர், தந்தை, தாய் குறித்து பொறுப்பு மற்றும் பயன் குறித்துக் குறிப்பிடும் சில குறள்கள் உள்ளன என்று கூறுகிறது. உதாரணமாக, பெற்றோருக்குக் குழந்தை அறமுடையவனாய் வளர்ப்பது பெருமை எனக் கூறும் குறள்கள் 66 மற்றும் 67 உள்ளன’ என்று நமக்கு ஒரு தெளிவைத் தருகிறது. பின் குறள் 66:

**குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர்.**

'The pipe is sweet,' 'the lute is sweet,' by them't will be averred, Who music of their infants' lisping lips have never heard

அதிகாரம்-7 புதல்வரைப் பெறுதல், எனக் குறளையும் ஆங்கில மொழிபெயர்ப்பையும் கூறிப் பின்னர் நான்கு உரையாசிரியர்களின் உரைகளையும் வழங்குகிறது.

### மு.வரதராசன் விளக்கம்

தம் மக்களின் மழலைச் சொல்லைக் கேட்டு அதன் இனிமையை நுகராதவரே குழலின் இசை இனியது யாழின் இசை இனியது என்று கூறுவர்.

### கலைஞர் மு.கருணாநிதி விளக்கம்

தங்கள் குழந்தைகளின் மழலைச் சொல்லைக் கேட்காதவர்கள்தான் குழலோசை, யாழோசை ஆகிய இரண்டும் இனிமையானவை என்று கூறுவார்கள்.

### பரிமேலழகர் விளக்கம்

குழல் இனிது யாழ் இனிது என்ப - குழலிசை இனிது யாழிசை இனிது என்று சொல்லுவர்; தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர் - தம் புதல்வருடைய மழலைச் சொற்களைக் கேளாதவர். ('குழல்', 'யாழ்' என்பன ஆகுபெயர். கேட்டவர் அவற்றினும் மழலைச்சொல் இனிது என்பர் என்பது குறிப்பெச்சம். இனிமை மிகுதிபற்றி மழலைச்சொல்லைச் சிறப்பு வகையானும் கூறியவாறு. இவை மூன்று பாட்டானும் இம்மை பயன் கூறப்பட்டது.)

### சாலமன் பாப்பையா விளக்கம்

பெற்ற பிள்ளைகள் பேசும் பொருளற்ற மழலைச் சொல்லைக் கேட்காதவர்தாம், குழலும் யாழும் கேட்க இனியவை என்பர். (திருக்குறள். AI செயலி)

இந்த நான்கு உரைகளின் வழி அக்கு றள்களின் பொருளை ஓரிடத்திலேயே ஒருவர் அறிந்துகொள்ளமுடிகிறது.

### திருக்குறள்AI யில் மேம்படுத்த வேண்டியவை

திருக்குறள்.AI போன்ற பல செயற்கை நுண்ணறிவுசார் தளங்கள் இணையதளத்தில் இருக்கின்றன. இருப்பினும் இதில் பல நன்மைகளும் சில மேம்படுத்த வேண்டிய தன்மைகளும் அடங்கியுள்ளன. திருக்குறள்.AI வள்ளுவர் இயற்றிய அனைத்துக் குறள்களையும் உள்ளடக்கியுள்ளது. அதை அனைவரும் விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காக மேற்சொல்லப்பட்ட நான்கு உரையாசிரியர்களின் உரைகளும் வழங்கப்பட்டுள்ளன. திருக்குறளுக்குப் பழைய உரைகள் இருக்கின்றன. பரிமேலழகர் எழுதிய உரையும் நமக்குப் பழைய உரைகளில் ஒன்றாகவுள்ளது. ஆனால் திருக்குறள்.AI, மு.வரதராசன் அவர்களின் உரையையே முதலில் காண்பிக்கின்றது. இது புதிதாகத் திருக்குறளை வாசிப்பவர்களுக்கும் கற்றுக் கொள்ளும் ஆர்வம் உடையவர்களுக்கும் எளிமையாக இருக்கும் என்ற நோக்கில் வைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் காலவரிசை நிலையில் உரைகளைக் காட்டும்போது தான் எந்த உரைக்குப் பின் எந்த உரை என்ற வரிசைமுறை புரிவதோடு படிப்பவர்களுக்கும் உரைகளின் படிநிலைமுறை புரியும். உரைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் தெளிவுடன் புரிந்துகொள்ள முடியும்.

அடுத்ததாக இந்தச் செயற்கை நுண்ணறிவு திருக்குறள்.AI திருக்குறள் சார்ந்த அனைத்து கேள்விகளுக்கும் பதில் கூறும் வகையிலேயே அமைக்கப்பட்டிருந்தாலும் அவை சரியான பதிலை நமக்குத் தருகின்றதா? என்பதில் மேம்படுத்த வேண்டிய நிலை உள்ளது. ஏனெனில் திருக்குறள்.AI யைச் சோதிக்கும் போது உதடு ஒட்டாத திருக்குறள் உள்ளதா எனக் கேட்க்கையில். அதற்கு 'உதடு ஒட்டாத குறள் உள்ளதா?,

'உதடு ஒட்டாத குறள்' என்று குறிப்பாகத் திருக்குறளில் வசனம் இல்லை. ஆனால், பேசும் நயம், அதற்குள்ளிருக்கவேண்டிய கட்டுப்பாடு, பேச்சின் பயன் ஆகியவை தொடர்பாகக் குறள்கள் உள்ளன. நீங்கள் குறிப்பிட்ட 'உதடு ஒட்டாத' என்ற சொல்லாக திருக்குறளில் குறள் வரவில்லை. என்ற பதிலைத் திருக்குறள்.AI அளித்தது.

ஆனால் AI Overview என்று சொல்லக்கூடிய Google Gemini AI-யிடம் உதடுகள் ஒட்டாத திருக்குறள்கள் உள்ளதா? என்று கேட்டால், அதற்கு Google Gemini AI மொத்தம் 24 உள்ளன. இதில் "ப" மற்றும் "ம" எழுத்துக்கள் வராமல், உதடுகள் ஒட்டாமல் உச்சரிக்கக்கூடிய குறள்கள் உள்ளன. உதாரணமாகத் துறவு அதிகாரத்தில் வரும்

**"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்" (குறள் 341)**

என்ற குறள் உதடுகள் ஒட்டாமல் உச்சரிக்கக்கூடியதாகும்.

உதடுகள் ஒட்டாத குறள்கள் குறித்து ஆய்வாளர் நிறோஷ் எழுதிய (உதடுகள் ஒட்டாத திருக்குறள்கள்: இதழகல் குறள் வெண்பாக்கள்) என்ற இணையக் கட்டுரை இதனை மெய்ப்பிக்கிறது. திருக்குறள் குறித்த பல்வேறு வகைகளில் தோன்றும் ஐயங்களுக்கு விடை தருவது போல் இன்னும் இதனை விரிவுபடுத்தலாம்.

வணங்குதல் என்ற சொல் திருக்குறளில் எங்காவது பயின்று வந்துள்ளதா அல்லது வணங்குதல் சார்ந்த குறள்கள் திருக்குறளில் உள்ளதா என்ற கேள்விக்குத் திருக்குறள்.AI 'வணங்குதல்' என்ற சொல் திருக்குறளில் நேரடியாகப் பயன்படுத்தப்படவில்லை. உங்களுடைய தேடலில் பொருத்தமான குறள் கிடைக்கவில்லை. தயவு செய்து கூடுதல் விவரத்துடன் முயற்சி செய்யவும். Google Gemini AI வணங்குதல் என்ற சொல் திருக்குறளில் எங்காவது பயின்று வந்துள்ளதா? என்று கேட்டதற்கு

ஆம், "வணங்குதல்" என்ற சொல் திருக்குறளில் இடம்பெற்றுள்ளது. இது குறிப்பாக இரண்டு வெவ்வேறு குறள்களில் வெவ்வேறு பொருள்களில் பயன்படுத்தப் பட்டுள்ளது. அவை பின்வருமாறு:

### குறள் 9 (கடவுள் வாழ்த்து அதிகாரம்)

**குறள்**

**"கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை"**

**பொருள்**

எட்டு வகையான குணங்களை உடைய இறைவனின் திருவடிகளை வணங்காத தலைகள், உணர்வு இல்லாத பொறிகளைப் போன்றவை. இங்கு "வணங்குதல்" என்பது இறைவழிபாடு அல்லது பணிவைக் குறிக்கிறது.

### குறள் 827 (கூடாநட்பு அதிகாரம்)

**குறள்**

**"சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க**
**வில்வணக்கம்**
**தீங்கு குறித்தமை யான்"**

**பொருள்**

வில்லின் வளைவு (வணக்கம்) தீமை செய்வதைக் குறிப்பதைப் போல, பகைவர்களிடம் இருந்து வரும் சொல் வணக்கத்தையும் (பணிவான பேச்சையும்) நன்மையாகக் கருதக் கூடாது. இங்கு "வணக்கம்" என்பது பணிவான சொல் அல்லது செயலால் வெளிப்படும் பணிவைக் குறிக்கிறது.

இந்தக் குறள்கள் "வணங்குதல்" என்ற சொல்லை வெவ்வேறு சூழல்களில் கையாண்டு, அதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன.

இவ்வாறாக மேம்படுத்த வேண்டியவற்றை இன்னும் பல கோணங்களில் சிந்தித்துத் திருக்குறள்.AIயில் சேர்த்தால் பலருக்கும் பயனுடையதாக இந்தத் தளம் மாறும்.

## முடிவுரை

இணையமும் செயற்கை நுண்ணறிவும் இன்றைய காலகட்டத்தில் தமிழ் மொழியையும் அதன் தகவல்களையும் மக்களிடம் மிக விரைவாகக் கொண்டு சேர்ப்பதில் முக்கியப் பங்காற்றி வருகின்றன. திருக்குறள் பற்றி அறிய பல இணையதளப் பக்கங்களும், சில செயற்கை நுண்ணறிவுகளும் (AI) உள்ளன. அதில் திருக்குறள்AI என்னும் செயற்கை நுண்ணறிவானது திருக்குறள் சார்ந்த தகவல்களையும் குறளுக்கான உரைகளையும் உள்ளடக்கி அமைகின்றது. புதிய முயற்சி. இருப்பினும் இதில் மேம்படுத்த

வேண்டிய தன்மைகளும் உள்ளன. திருக்குறள் குறித்து எத்தனையோ இணையதளங்கள் கொட்டிக் கிடக்கின்றன. எல்லாக் கூறுகளையும் உள்ளடக்கிய பல தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தத் திருக்குறள்.AI அவற்றையெல்லாம் கடந்து அனைத்தையும் உள்ளடக்கிய ஒன்றாக மாறும்போது தமிழுக்குச் சிறப்பான வளம் சேர்க்கும்.

## துணை நின்றவை

1. தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை (it.tn.gov.in)
2. இணையமும் இனிய தமிழும்- முனைவர் க. துரையரசன்
3. நாமக்கல் கவிஞர் (உரை.), திருக்குறள், சாரதா பதிப்பகம்.
4. THIRUKKURAL AI செயற்கை நுண்ணறிவு செயலி.
5. திருக்குறள் சாட்பாட் செயற்கை நுண்ணறிவு செயலி.
6. தமிழ் AI செயற்கை நுண்ணறிவு செயலி மற்றும் வலையொலி பக்கம்.
7. இணையமும் தமிழும், பிரகாஷ்.க (ஆய்வுக் கட்டுரை)
8. கணித்தமிழ் மாநாடு24, https://youtu.be/EGX-QWAhP5S0?si=ezrqpN71QDqEyg&X
9. உதடுகள் ஒட்டாத திருக்குறள்கள்: இதழகல் குறள்வெண்பாக்கள்.,ஆய்வாளர் நிறோஷ், https://niroash.blogspot.com/2015/04/thirukkural&inspiration.html?m=1